Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

CC.No:- 46/2018 Date:- 18.06.2026

Deposition of witness for prosecution :- PW :-12

| | | | |
|---|---|---|---|
| Name | வி.வி. சிவக்குமார் | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**<u>முதல் நிலை விசாரணை தொடர்ச்சி :-</u>**

7. தற்பொழுது நான் தேனி மாவட்டம் வீரபாண்டி காவல் நிலைய ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். என்னுடைய புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது 279,338,304-An கீழ் குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை:-</u>**

1. விபத்து நடந்ததாக எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு புகார் வந்ததது என்றால் 05.09.2017-ம் தேதியன்று காலை 06.30 மணிக்கு வந்ததது. சம்பவம் நடந்து 11 மணிநேரம் காலதாமதமாக தான் புகார் வந்ததது என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் தேதிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். 11.00 மணிநேரத்தில் மேற்படிசாலையில் ஆயிரக்கணக்கான வாகனங்கள் சென்றிருக்கும் என்றால் சரிதான்,

2. சம்பவம் நடந்த இடத்திற்கு 05.09.2017-ம் தேதியன்று காலை 07.15 மணிக்கு சென்றேன். சம்பவம் நடைபெற்று 12 மணிநேரம் கழித்து சென்றேன் என்றால் சரிதான். பார்வை மகஜரில் பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி துண்டுகள் மற்றும் நம்பர் பிளேட் ஆகியவை இருந்ததாக நான் குறிப்பிட்டது தவறானது என்றால் சரியல்ல. 11 மணிநேரமாக அவ்விடத்தில் மேற்படி பொருட்கள் இருந்திருக்கும் பட்சத்தில் மேற்படி பொருட்கள் சிதைந்திருக்கும் என்றால் சரியல்ல.

3. நான் சொன்ன நாள் மற்றும் நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யவில்லை என்றும், நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிட்டுள்ள காரின் உடைந்த பாகங்கள் விபத்துக்குள்ளான வாகனத்துகுரியது என்று நான் கருத்துரை எதும் பெறவில்லை என்றால் சரிதான். அதேபோல் உடைந்த பாகங்களை வாகனத்துடன் பொருத்தி பார்த்தேனா என்றால் இல்லை. மோட்டார் வாகன ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிட்டுள்ள உடைந்து போன பாகங்கள் விபத்து ஏற்பட்ட காருக்குரியது என்று எவ்விதமான விபரங்கள் கூறவில்லை என்றால் சரிதான்.

4. இருசக்கர வாகனமும் விபத்துகுள்ளானது என்றால் சரிதான். அதன் உடைந்த பாகத்தை இவ்வழக்கில் நான் கைப்பற்றவில்லை என்றால் அங்கு இல்லாதால் நான் கைப்பற்றவில்லை. விபத்துகுள்ளான காரும் பைக்கும் தான் மோதியது என்பதற்காக அதிலிருந்த பெயின்டை நான் சோதனைக்கு எடுக்கவில்லை என்றால் சரிதான்.

5. படிவம் 91 ல் வலதுபுற சைட் மிரர் என்ற வாசகமும் உடைந்த நிலையில் கண்ணாடி மற்றும் பிளாஸ்டிக் பாகங்கள் மற்றும் காரின் நம்பர் பிளேட் பகுதிகள் உடைந்த என்று ஒயிட்னர் போட்டு திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜரில் காரின் வலது புற சைட் மிரர் என்று ஒயிட்னரால் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் காரின் பிளாஸ்டிக் பாகங்கள் என்ற வாசங்கள் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே வாசகம் கைப்பற்றுதல் மகஜரிலும் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. வழக்கு ஆவணங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்த காரணத்தினால் தான் மேற்படி ஆவணங்கள் திருத்தம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்த நேரம் இரவு 07.15 மணி என்றால் சரிதான்.

7. மோட்டார் சைக்கிள் கட்ரோட்டில் இருந்து மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று தேசியநெடுஞ்சாலையில் வடக்கு நோக்கி செல்லும் போதுதான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். பைக்கை ஓட்டியவருக்கு லைசன்ஸ் கிடையாது என்றால் சரிதான்.

8. கட்ரோட்டில் இருந்து வந்தவர் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் நிலைதடுமாறி சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. பின்னர் நான் விசாரிக்கும்

போது அ.சா.1 எதிரியை பார்க்கவில்லை என்றும் எந்த வாகனம் மோதியது என்று தனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல.

9. மற்ற சாட்சிகளும் விபத்து ஏற்படுத்திய வாகனம் நிற்காமல் சென்றுவிட்டதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய வானத்தை எப்பொழுது காவல் நிலையத்திற்கு கொண்டுவந்தேன் என்று குற்ற இறுதியறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

10. நான் குற்ற இறுதியறிக்கையில் கூறுவது போல் எதிரியின் அஜாக்கிரதையால் இவ்வழக்கின் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரி அந்த சமயத்தில் வாகனத்தை ஓட்டவில்லை என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை ஓட்டியவர் கெல்மட் அணியவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக கூறும் வாகனத்தை நான் 12 மணிநேரம் கழித்து தான் பார்த்திருப்பேன் என்றால் சரிதான். அந்த 12 மணிநேரத்தில் காரை யார் ஓட்டினார்கள் அந்த கார் எங்கிருந்ததது என்று என் குற்ற இறுதியறிக்கையில் நான் கூறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை –**</u> இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப் பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.